[6th November 1965

கரும்பு உற்பத்திக்கான ஆராய்ச்சி நிலையங்கள்

* 318 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரும்பு உற்பத்திப் பெருக்கத்திற்கான ஆராய்ச்சி நிலையங்கள் நமது மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) தலைமை ஆராய்ச்சி நிலையம், கடலூர்.
உதவி ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி.
உதவி ஆராய்ச்சி நிலையம், குடியாத்தம்.

Cashewnut cultivation

* 319 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to expand the area under cashewnut cultivation in the State ; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) நான்காவது திட்டக் காலத்தில், 15,000 ஏக்கர் காட்டு நிலங்களிலும், 10,000 ஏக்கர் காடுகள் அல்லாத பிற நிலங்களிலும் முந்திரி சாகுபடி செய்யும் செயற்குறிப்பு உள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன இடங்களில், திட்டத்தின் கீழ், எந்தெந்த இடங்களில் முந்திரி பயிர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கமுடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்தெந்த பகுதிகள் தகுதியுள்ளவையாக இருக்கின்றனவோ அந்த நிலங்களில் முந்திரி பயிர்செய்யப் படுகிறது.

Package Scheme for Chidambaram taluk

* 320 Q.—Sri A. RAMACHANDRA RAYAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to begin the Package Scheme in Chidambaram taluk, South Arcot district; and

(*b*) when will the Scheme be implemented?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.